17.10.2023
O.S.No.254/09

பி.வா.சா.1.திரு.சேதுபதிராஜா த.பெ.சேதுகுமார்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. பி.வா.சா.ஆ-1 கிரைய ஆவணம் ஏற்பட்டது எனக்கு நன்கு தெரியும். அந்த கிரைய பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேனா என்றால் போட்டுள்ளேன். பி.வா.சா.ஆ-1 கிரைய ஆவணம் எழுதுவதற்கு 3 மாதமாக பேசிக்கொண்டிருந்தோம், ஆனால் 1 வாரத்திற்கு முன்பு கிரையம் வாங்குவது என முடிவு செய்து பணம் கொடுத்தோம். 12ம் பிரதிவாதி இன்ஜினியராக அமெரிக்காவில் வேலை பார்த்து வருகிறார். 12ம் பிரதிவாதி பி.வா.சா.ஆ-1 கிரைய பத்திரம் பதிவதற்கு என்னை நம்பிதான் ஏற்பாடு செய்தாரா என்றால் அவர் எனது மைத்துனர் என்பதால் என்னிடம்தான் அனைத்து பொறுப்புகளையும் ஒப்படைத்தார். தாவா சொத்து குறித்து வில்லங்க சான்றிதழ் பெற்று அதை ஆய்வு செய்துதான், இந்த தாவா சொத்தை கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். அவ்வாறு வில்லங்க சான்றிதழ் பெற்று நன்கு ஆராய்ந்துதான் தாவா சொத்தை கிரையம் வாங்கினோம் என்று எங்களது எதிர் உரையிலோ, நிருபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சொல்லாமல் விடுபட்டிருக்கலாம்.

2. நான் வாங்கி பார்த்ததாக சொல்லப்படும் வில்லங்க சான்றிதழை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-1 கிரைய பத்திரமானது பி.வா.சா.ஆ-2 பவர் பத்திரத்தின் அடிப்படையில்தான் எழுதப்பட்டது தான் என்றால் சரிதான். அந்த பவர் பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். நான் பி.காம் பட்டதாரி. பி.வா.சா.ஆ-2 பவர் பத்திரத்தில் தாவா சொத்து கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்ட் சொத்து என்றோ, EMG சௌந்தராஜன் என்றோ காணப்படுகிறதா என்றால் இல்லை. பி.வா.சா,ஆ-2 ஆவணப்படி தாவா சொத்து EMG கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்ட் சொத்து என்றும், EMG சௌந்தராஜன் டிரஸ்டி என எதுவும் காணப்படததால் அந்த டிரஸ்ட் சொத்தை நாங்கள் கிரையம் பெற்றதாக சொல்வது உண்மைக்கு புறம்பான சங்கதி என்றால் சரியல்ல, ஆகையால் பி.வா.சா.ஆ-1 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் எங்களுக்கு எந்த உரிமையும் சித்திக்கவில்லை என்றால் சரியல்ல.

3. பி.வா.சா.ஆ-1 மற்றும் பி.வா.சா.ஆ 2 ஆவணங்களின் அசல் பத்திரம் யாரிடம் உள்ளது என்றால், முதலில் நாங்கள் வழக்கு தாக்கல் செய்த போது, அந்த அசல் ஆவணங்களை தாக்கல் செய்திருந்தோம், பின்பு எங்களுக்கு தேவைப்பட்டதால் நாங்கள் மீண்டும் அதை திரும்ப பெற்றோம். பி.வா.சா.ஆ-1 மற்றும் பி.வா.சா.ஆ-2 அசல் ஆவணங்கள் 12ம் பிரதிவாதி காளிஸ்வரன் வசம் உள்ளது. அந்த இரண்டு ஆவணங்களையும் நீதிமன்றத்தில் நாங்கள் தாக்கல் பண்ண தயாராக உள்ளோமா என்றால் எப்ப வேண்டுமானாலும் தயாராக உள்ளோம். பி.வா.சா.ஆ-1 கிரைய ஆவணத்தில் நான் கையெழுத்து எதுவும் போடவில்லை. பி.வா.சா,ஆ-1 ஆவணத்தில் தாவா சொத்து EMG கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்டி சொத்து என்றும், EMG சௌந்தராஜன் டிரஸ்டி

என்றும் காணப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-1 மற்றும் பி.வா.சா.ஆ-2 ஆவணங்களில் EM கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்ட் சொத்து கிரையம் பெறப்பட்டதாக இல்லை என்றால் சரிதான், ஆனால் EM கோபாலகிருஷ்ண கோன் மொத்த சொத்தும் டிரஸ்டுக்காக எழுதப்பட்டு EMG சௌந்தராஜன்தான் நிர்வாகம் பார்த்து வந்தார், அவர் எழுதிக்கொடுத்த பவர் பத்திரத்தின் அடிப்படையில் தான் இந்த தாவா சொத்து கிரையம் பெறப்பட்டுள்ளது.

4. நான் மேற்கூறிய தாவா சொத்திற்கான விளக்கம் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ-2 பவர் பத்திரத்தில் என்னுடைய பிதுராஜித வகையில் பாத்தியப்பட்டதும், என் பெயரில் பட்டா ஏற்பட்ட சொத்தும் என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-3 பட்டா பாஸ் புத்தகத்தை, பி.வா.சா.ஆ-1 கிரைய ஆவணம் ஏற்படுவதற்கு முன்பு எங்கள் தரப்பில் யாரும் பார்க்கவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-2 பவர் பத்திரத்தில் பி.வா.சா.ஆ-3 பட்டாவை பற்றி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-3 பட்டா பாஸ் புத்தகத்தில் EMG சௌந்தராஜன் மற்றும் 12ம் பிரதிவாதி காளிஸ்வரன் உட்பட 45 நபர்களின் பெயர் கூட்டாக தாக்கலாகி உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து EM சௌந்தராஜனிடம் இருந்து பவர் வாங்கியவர் காளிமுத்து என்று பி.வா.சா.ஆ-2 பவர் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-3 பட்டாவில் 45 நபர்கள் குறிப்பிடப்பட்டுள்ளதால் அது குறித்தான விளக்கம் தெரியுமா என்றால் தெரியாது.

5. பி.வா.சா.ஆ-3 பட்டாவில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்.17/1ஏ1ஏ. அதன் விஸ்திரணம் 3 ஹெக்டேர் 38 ஏர்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-1 கிரைய ஆவணம் ஏற்படுவதற்கு முன்பே பி.வா.சா.ஆ-3ல் காட்டப்பபட்டுள்ளவாறு சர்வே எண்.17/1ஏ1ஏ என இருந்தது என்றால் சரியல்ல, நாங்கள் கிரையம் வாங்கிய பின்பு கார்லேசனுக்காக வருவாய் துறையினர் சர்வே எண்.17/1ஏ1ஏ என பட்டா பாஸ் புத்தகத்தில் எழுதிக்கொடுத்தார்கள். EMG சௌந்தராஜன், EMG கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்ட் சொத்தை பொறுத்தோ, டிரஸ்டி என்ற கோதாவிலோ, காளிமுத்துவுக்கு பவர் பத்திரம் பி.வா.சா.ஆ-2 எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள பட்டாக்கள் பற்றி நான் தெரிந்து கொண்டேனா என்றால் எனக்கு தெரியாது. வாதிகள், இந்த வழக்கில் குறியிடு செய்துள்ள பட்டாக்களை பற்றி நான் எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் சரிதான், அந்த பட்டாக்களுக்கும், எங்கள் சொத்திற்கும் சம்பந்தம் இல்லை.

6. சர்வே எண்.17/1ஏ1ஏ-ல் கண்டுள்ள சொத்துக்களை தவிர, வேறு சொத்துக்களுக்கு நாங்கள் எந்த உரிமையும் கொண்டாடவில்லை என்பதுதான் எங்கள் வழக்கு என்றால் சரிதான். சர்வே எண்.158/1ல் கண்டுள்ள சொத்திற்கு கார்லேசனாக சர்வே எண்.17/1ஏ1ஏ என வருவாய் துறையினர் குறித்து கொடுத்துள்ளனர். நாங்கள் கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் சொத்தின் நடப்பு சர்வே எண்.17/1ஏ1ஏ என்றால் நாங்கள் கிரையம் வாங்கிய சொத்து சர்வே எண்.158/1

அதற்கு கார்லேசனாக சர்வே எண்.17/1 ஏ 1 ஏ கொடுக்கப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ-3 ல் கண்ட சர்வே எண்.17/1 ஏ 1 ஏ சொத்திற்காகத்தான் இந்த வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் தாக்கலாகி உள்ள நீதிமன்ற ஆணையரின் மாதிரி வரைபடத்தில் சர்வே எண்.16/3 சி/1 பி என்ற பகுதியில் வாதி கருணாநிதியின் பெயரும், சர்வே எண்.16/3 சி 2 என்ற பகுதியில் ராஜேந்திரன் பெயரும், சர்வே எண்.17/12 என்ற பகுதியில் பாண்டிச்செல்வம் பெயரும், சர்வே எண்.17/13 என்ற பகுதியில் முத்துப்பாண்டி பெயரும், சர்வே எண்.17/10 என்ற பகுதியில் முருகன் பெயரும் மற்றும் சர்வே எண்.17/9 என்ற பகுதியில் தேவிகுமார் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளதாக காணப்படுகிறது என்றால் சரிதான், ஆனால் அந்த கமிஷனர் அறிக்கை தவறானது, எங்களுக்கு முறையாக அறிவிப்பு சார்வு செய்யாமல், அவர்களாக அந்த அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்கள், அந்த அறிக்கைக்கு நான், எங்கள் தரப்பில் ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளேன்.

7. மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் உள்ள நீதிமன்ற ஆணையரின் மாதிரி வரைபடத்தில் மேலே குறிப்பிட்ட சர்வே எண்களுக்கு தெற்கு மாலாகவும், கிழக்கு மாலாகவும் சர்வே எண்.17/1 ஏ 1 ஏ 1 அமைந்துள்ளதாக காணப்படுகிறது என்றால் சரிதான், ஆனால் அந்த அறிக்கை தவறானது. சர்வே எண்.17/1 ஏ 1 ஏ சொத்திற்கு புல வரைபடம் எடுத்துள்ளோமா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் 11 மற்றும் 12 ம் பிரதிவாதிகளுக்காக ஆஜரான வழக்கறிஞர் திரு.ஜெயராமன் என்பவர் ஸ்தல பார்வையை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்க வேண்டும் என குறிப்பாணை தாக்கல் செய்துவிட்டு, சென்று விட்டதாக காணப்படுகிறது என்றால் அவர் எங்களது வழக்கறிஞரே கிடையாது, எங்களது வழக்கறிஞர் திரு.ரமேஸ் மற்றும் திரு.பாஸ்கர் மட்டும் தான். நான் மேற்படி சங்கதியை இந்த வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவாசொத்தை கிரையம் வாங்கும் முன்பு நாங்கள் சென்று பார்த்தோமா என்றால் பார்த்தோம். சர்வேயர் வைத்து அளந்தோமா என்றால் EMG சௌந்தராஜனே சர்வேயரை அழைத்து வந்தார், அப்போது அளந்து பார்த்தோம். கிரையம் பதிவதற்கு சுமார் 4 நாட்களுக்கு முன்பு அளந்து பார்த்தோம்.

8. அவ்வாறு அளந்து பார்த்தபோது பி.வா.சா.ஆ-3 பட்டா பாஸ் புத்தகத்தில் உள்ளது போல் சர்வே எண்.17/1 ஏ 1 ஏ-ல் 3 ஹெக்டேர் 38 ஏர்ஸ் நிலம் மொத்த விஸ்தீரணம் என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. எங்களுக்குரிய 90 செண்டை மட்டும்தான் அளந்து காண்பித்தார். மொத்த சொத்தான 3 ஹெக்டேர் 38 ஏர்சையும் அளக்காமல் 90 செண்டை மட்டும்தான் அளந்து காண்பித்தார்களா என்றால் 90 செண்டை மட்டும்தான் அளந்து காண்பித்தார்கள். நான் வழக்காடுவது பி.வா.சா.ஆ-3 பட்டா பாஸ் புத்தகத்தில் உள்ளது போல் சர்வே எண்.17/1 ஏ 1 ஏ-ல் 3 ஹெக்டேர் 38 ஏர்ஸ்-ல் அடங்கியுள்ள 90 செண்டை பொறுத்து மட்டும்தான் என்றால் சரிதான். நாங்கள் கிரையம் வாங்கிய பின்பு 3 ஹெக்டேர் 38 ஏர்சில் எங்களுக்கு பாத்தியப்பட்டதாக சொல்லப்படும் 90 செண்டு நிலத்தில் உட்பிரிவு செய்தவற்கு மனு செய்திருந்தோம். அவ்வாறு அந்த

மனுவை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் நாங்கள் உட்பிரிவு செய்வதற்கு மனு தாக்கல் செய்ய சென்றபோதே ஏற்கனவே வாதிகள் பெயரில் தவறாக உட்பிரிவு செய்துள்ளதால், அந்த பட்டாவை ரத்து செய்த பின்புதான் எங்களுக்கு உட்பிரிவு செய்ய முடியும் என்று வருவாய் துறையில் கூறிவிட்டதால், அதற்கு ஆட்சேபணை தெரவித்து ந.க.எண்.5300/2008 என்று கோட்டாட்சியரிடம் மனு கொடுத்து வழக்கு நிலுவையில் உள்ளது.

9. சர்வே எண்.158/1-ல் மொத்தம் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 1 ஏக்கர் 72 செண்டு ஆகும். சர்வே எண்.158/2 ல் மொத்த விஸ்தீரணம் சுமார் 10 ஏக்கருக்கு மேல் மொத்தம் இரண்டு சர்வே எண்ணும் சேர்ந்து 12 ஏக்கர் 24 செண்டு ஆகும். எனது வழக்குப்படி சர்வே எண்.158/1-க்கு கார்லேசன் எண்.17/1 ஏ 1 ஏ என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-3 ல் சொல்லப்பட்டுள்ள 3 ஹெக்டேர் 38 ஏர்ஸ் என்பது சர்வே எண்.158/1-க்கு உண்டான சொத்து என்றும், அதற்கான கார்லேசன் 17/1 ஏ 1 ஏ என்றும் எனது தரப்பு வழக்காகும் என்றால் சரிதான். வாதிகள் தாவா சொத்திற்குண்டான கிரைய பத்திரங்கள் மற்றும் அதற்கான பட்டாக்கள் ஆகியவை இந்த வழககில் தாக்கல் செய்துதான் வழக்காடுகிறார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வாதிகள் தரப்பு கிரைய ஆவணங்களை நான் வாசித்து பார்க்கவில்லை.

10. பி.வா.சா.ஆ-10 ஆவணமானது EMG கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்டுக்கு, சிறுதுார் கிராமத்தில் உள்ள மொத்த சொத்தான 39 ஏக்கர் 75 செண்டுநிலத்தை கிரையம் செய்வதற்கு மதுரை மாவட்ட முதன்மை நீதிமன்றம் அனுமதி கொடுத்த உத்தரவு நகல் என்றால் சரிதான். மேற்படி ஆவணப்படி அனுமதி பெற்ற சொத்து என்று எங்களது கிரைய ஆவணமான பி.வா.சா.ஆ-1 மற்றும் பொது அதிகார பத்திரமான பி.வா.சா.ஆ-2 ல் காணப்படவில்லை என்றால் சரிதான். கிரையம் வாங்குவதற்கு முன்பு பி.வா.சா.ஆ-10 ஆவணத்தை பார்த்தோமா என்றால் பார்த்தோம். அப்படி இருந்தும் எங்களது கிரைய ஆவணத்தின் டிரஸ்ட் சொத்து என்று சொல்லவேண்டும் என்றோ, டிரஸ்டி என்ற கோதாவில்தான் கிரையம் கொடுக்கப்படுகிறது என்றோ, வாசகம் இடம் பெற வேண்டும் என்று நான் எதுவும் வலியுறுத்தவில்லை என்றால் சரிதான்.

11. வாதிகள் தரப்பு கிரைய ஆவணங்களான வா.சா.ஆ-1 முதல் வா.சா.ஆ-5 வரையான ஆவணங்கள் அனைத்தும் கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று விவரமும் பி.வா.சா.ஆ-10 ஆவணப்படி அனுமதி பெற்ற விவரமும் EMG சௌந்திராஜன் டிரஸ்டி என்ற கோதாவில் கிரையம் கொடுக்கும் விவரமும், அந்த டிரஸ்டின் பெயரில் கிரையத் தொகை வங்கி வரைவு ஓலை மூலம் கொடுக்கப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான், ஆனால் வாதிகள் சர்வே எண்.158-ல் உள்ள சொத்தைதான் கிரையம் வாங்கினார்கள், அந்த சொத்திற்கு நீதிமன்றத்தில் இருந்து அனுமதி பெறவில்லை. மேற்படி கிரைய ஆவணங்களில் சொத்து சிறுதுார் கிராமத்தில் அமைந்துள்ளதையும், அதன் நான்குமாலையும் விஸ்தீரணத்தையும் கூறப்பட்டுள்ளதாக காணப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதே போல்தான் எனது கிரைய ஆவணத்திலும் காணப்படுகிறது.

12. வா.சா.ஆ-1 முதல் வா.சா.ஆ-5 வரையான கிரைய ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் பி.வா.சா.ஆ-10 ஆவணத்தில் கட்டுப்பட்டுள்ள சொத்துக்கள் என்று தெரிந்தும் நான் வீண்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. **(வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**